1999 மார்ச் 17] [கலைஞர் மு. கருணாநிதி]

105. சுதந்திரப் பொன்விழா ஆண்டில் தொடங்கி சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க சமத்துவபுரத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 17.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலும் 50 இடங்களில் சமத்துவபுரங்கள் உருவாக்கப்படும். சமத்துவபுரம் திட்டத்திற்கு நான் அடிகோலியவன் என்றாலும், இத்தகைய கொள்கை வழிச் சாதனை புரிந்திட என்னை ஆளாக்கிய பெரியார் பெயரால் "பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்" என இத்திட்டம் இனி அழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

106. அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதுவோருக்கு பயிற்சி அளிக்க சென்னையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒன்றும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒன்றும், ஆக இரண்டு பயிற்சி நிலையங்கள் உள்ளன. இப்பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், நம் மாநிலத்திலிருந்து அகில இந்தியப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், இவ்விரண்டு பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து வசதிகளையும் தரத்தையும் மேம்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர்-மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

107. பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல்வாழ்வுக்காகவும் அவர்கள் சேதாரமின்றிப் பயன்கள் பெறுவதற்காகவும் தனித்துறை, தனி அமைச்சர் அமைத்தது கழக அரசேதான். அத்துறைக்கென வரும் நிதி ஆண்டில் ரூ.150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

108. கடந்த ஆண்டு இந்த அரசு தொடங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இதர வகுப்பினர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ரூ. 18 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

109. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பத் துறை வருமாண்டுகளில் மிகப் பெருமளவு வேலைவாய்ப்புகளை அளிக்கும் என்பதால், அவர்களில் 5,000 பேருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.